INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

**இன்னும் நிறுத்தப்படவில்லை**
**2016 இல் இலங்கையில் சித்திரவதை**
**அறிக்கை**
**யூலை 2017**

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

## *நிறைவேற்றுச் சுருக்கம்*

இலங்கை இராணுவத்தினரும் பொலிசாரும் 2016/2017 களிலும் தொடர்ந்து தமிழர்களை கடத்துவதிலும் சட்டபூர்வமற்ற வகையில் தடுத்து வைப்பதிலும் சித்திரவதை செய்வதிலும் கற்பழிப்பதிலும் ஈடுபடுகின்றனர் என்பதை இவ்வறிக்கை நிலைநாட்டுகின்றது.

இவ்வகையான மீறல்கள் கிரமமாகவும், பாதுகாப்புப் படையின் கட்டளையிடுபவர்களின் அலுவலக ரீதியான அங்கீகாரத்துடனும் தொடர்கின்றன. பாதிப்புற்றோர் தமது அனுபவங்களை விபரிக்கையில் சேவை மூப்புள்ள அலுவலர்கள் தாம் சித்திரவதை செய்யப்படும் இடத்திற்கு வந்துபோவதாகக் கூறியுள்ளனர். இச்செயற்பாடுகள் வழமையான ஒழுங்கின்படி தொடருகின்றன. இதில் பாதுகாப்பு படையினரின் மூன்று கோஷ்டிகளும் தொடர்புபட்டு உள்ளன. ஒன்று ஆட்களைக் கடத்துவதிலும் இன்னொன்று அவர்கள் கேள்விகள் மூலம் விசாரணை நடத்துவதிலும் மற்றையது பணம்பெற்று விடுவிப்பதிலும் பாதிப்புற்றவர் ஓடித்தப்பியபின் அவர்களின் உறவினர்களை அதுபற்றி எதுவும் பேசாது அமைதிகாக்கச் செய்வதற்காக புலனாய்வுச் சேவையைச் சேர்ந்தவர்கள் அவர்களைக் கண்காணிப்பில் வைத்துக்கொள்வர்.

இவ்வகையான செயற்பாடுகள் பாதுகாப்புப் படையினர் மத்தியில் இருக்கும் கீழ்த்தரத்திலுள்ள விஷமிகளின் செயல்கள் மாத்திரமே என்று கூறிவிடமுடியாது. தடுத்து வைக்கப்படுபவர்கள் அதற்கென நிர்மாணிக்கப்பட்ட கூடங்களில் வைக்கப்படுவர். இவர்களின் விசாரணை செய்வதற்கென உள்ள அறைகள் சித்திரவதை செய்வதற்கான உபகரணங்களுடன் ஆனதாக இருக்கும். ஊபகரணங்களில் நபர்களைத் தொங்கவிடத்தேவைப்படும் உலோகக் கம்பிகளும் (பார்களும்) இருக்கும். தடுத்துவைக்கப்படுபவர்கள் பெண்கள் எனில் அதற்கென பெண் அலுவலர்கள் இருப்பர். அவர்களும்

சித்திரவதை செய்வதில் பங்குகொள்வர். பாதிப்புற்றோர் தங்களது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்கான கருவிகளால் எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளனர். இவ்வகையிலான கருவிகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் புரிபவர்களால் பாவிக்கப்படுவதில்லை.

ஊழல் என்பது பரவலாகவுள்ளது. சகல பாதிப்புற்றோரும் காலக்கிரமத்தில் குடும்பத்தவரால் பணம் செலுத்தப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர். கடத்தப்பட்ட ஆளை மீட்கும் முயற்சி மந்த கதியில் இருந்ததால் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீட்புப் பணம் பெற்றுக்கொள்வதில் தீவிரமாக ஈடுபடுவார்கள். அவ்வகையில் பணம் செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் அரைவாசிப்பேர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ( EPDP) என்னும் அரசுக்குச் சார்பான தமிழ் துணை இராணுவப்படைக் குழுக்கள் தரகராகச் செயற்பட்டு பணம்பெற்று விடுவிக்கப்படுபவர்கள் ஆவர். எமக்குத் தெரிந்தமட்டில் இவ்விடயம் தொடர்பில் புலனாய்வு செய்யப்பட்டதோ இல்லை. இவ்வகையில் நபர்களை விடுவிப்பதில் சம்பந்தப்படும் தரகர்கள் வெளிநாட்டுக்கும் ஆட்கள் கடத்தப்படுவதையும் ஒழுங்கு செய்வார்கள் பாதிப்புற்றோர் உயிர்வாழ வேண்டுமேயாயின் நாட்டைவிட்டுச் செல்லும்படி அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுவது உண்டு. 2016/2017களில் இவ்வகையான துன்பத்திக்குள்ளாக்கப்பட்டவர்கள் விபரித்துள்ளதற்கு அமைய இலங்கை அரசின் கொழும்பு விமான நிலையத்திலுள்ள குடியேற்ற அலுவலர்கள் கடத்தல்காரரிடமிருந்து எந்தவொரு கேள்வியுமில்லாமல் வெளிநாடு செல்லவிட்டு விடுவார்கள்.

வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் யோசெப் முகாம் என அழைக்கப்படும் வன்னித் தலைமையகம் 2016-2017களில் தொடர்ந்தும் சித்திரவதையும், கற்பழிப்பும் செய்யப்படுகின்ற இடமாகவுள்ளது. இது அதே தேவைக்காக பொலிசாரின் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் (TID) இதனை பயன்படுத்துகின்றனர். அங்கு 2016/2017இல் ஏழு தமிழர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுள் பலர் வேறு தடுத்துவைக்கப்பட்டவர்கள் கூச்சல் இடுவதைச் செவிமடுத்துள்ளார்கள்.

ஆண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவது தொடர்ந்தும் அதிக அளவில் உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இது நடைபெறுவது நாட்டினுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமல்ல. ஆதலால் அவ்வகையான துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. பாதிப்புற்று நாட்டைவிட்டு வெளியே வந்தவர்கள் தங்களுக்கு என்ன நடந்தது என்றுகூட தகவல் வழங்குவதில் சங்கடப்படுகின்றார்கள். ஏனெனில் அதனால் ஏற்படும் வடுவிற்கு அஞ்சுவதால் ஆதலால் அந்நிலைமைக்குள்ளாக்கப்பட்டவர்கள் தற்கொலை செய்யவோ அல்லது செய்யப்போவதாக பேசிக்கொண்டு இருப்பார்கள்.

துன்புறுத்தல் செய்பவர்கள் காட்டும் கொடூரத்தன்மையும் இனவாதமும், பாதுகாப்புத் துறையின் பாரம்பரிய சீர்திருத்த ஒழுங்குமுறை தொடர்பில் பாரதூரமான கேள்விகளை எழுப்புகின்றது. இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களுக்கு மாற்றுத் தொழில்வாய்ப்பை வழங்குவதன் மூலம் அங்கு இருக்கும் இந்த கிரமமான துஷ்பிரயோகத்தின் அளவினைக் குறைத்து எதிர்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. தேவைப்படுவது யாதெனில் குற்றம் இழைப்பவர்களுக்கும் குற்றங்களிற்கு இலக்காக்கப்படுபவர்களுக்கும் தீவிரமான புனர்வாழ்வு அளிப்பதற்கான செயற்றிட்டம் ஒன்றே. அச்செயற்றிட்டத்தினால் மனநல சிகிச்சை தொடர்பான விடயம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதனைச் செய்வது போது சித்திரவதை, கற்பழிப்பு முதலியவற்றைச் செய்பவர்கள் இழைத்த குற்றங்களிற்கான பொறுப்பேற்றலை தவிர்த்துக்கொள்ளுமுகமாக இருத்தலாகாது.

தொடர்ந்து நடந்துவரும் குற்றச்செயல்களிற்கு இலங்கை அரசாங்கம் உடந்தையாகவுள்ளது. அது தொடர்பாக நம்பத்தக்க வகையிலான குற்றச்சாட்டுக்கள் திரும்பத் திரும்ப கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தும் அம்முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து அதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்புச் கூறச்செய்ய  தொடர்ச்சியாக தவறிவருகின்றது. அதனையிட்டு எடுக்கவேண்டிய தவிர்க்க முடியாத முடிவுயாதெனில் இக்குற்றச்செயல்கள் தொடர்பில் கடந்த 30 மாதகாலத்தினுள் எந்தநடவடிக்கையுமே எடுக்காது இருப்பது பாதுகாப்புக்கு பொறுப்பான கட்டமைப்புக்களை களைவதற்கு பதிலாக தமிழர் மீது திணிக்கப்படும் துன்புறுத்தல்களைப் பொருட்படுத்தாது விடுவது உகந்தது தெரிவு என அரசு கருதுவதாலாகும். இவர்கள் இவ்வாறு செய்வது தமக்கு வாக்காளர் மத்தியில் இருக்கும் செல்வாக்கை அல்லது அரசியல் ஆதரவை இழந்துவிடக்கூடாது என்பதற்காகவே. கடந்த அரசின் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பாரிய அளவிலான கொடூர செயல்கள் ஒருபுறம் இருக்க தற்போது இலங்கையில் இருக்கும் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் நடைபெறும் உரிமை மீறல்களைத் தவிர்த்துக்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்காது இருப்பதற்கு அவர்களைப் பொறுப்புக் கூறச் செய்வதற்காக மனித உரிமைகளை மதிக்கும் சர்வதேச  அரசாங்கங்கள் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ITJP கோருகின்றது.

‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘‘

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT